# தேசியகல்விஆணைக்குழு
# ஆட்சேர்ப்பு

தேசியகல்விஆணைக்குழுவில் தற்போது வெற்றிடமாகியுள்ள சிரேஸ்ட கொள்கை ஆராய்ச்சி அலுவலர் பதவிகளுக்கு ஆட்சேர்பினை மேற்கொள்வதற்கு இலங்கை தகைமையுடைய பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

**01. பொதுத் தகைகமைகள்**

(i) சிறந்தஒழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.
(ii) நீதிமன்றத்தினால் குற்றம் சாட்டப்பட்டு தண்டனை பெற்றவராக இருத்தலாகாது.
(iii) விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளும் திகதியில் 30 வயதிற்குகுறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அரச அல்லது அரச சார்பான நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வயதெல்லை கிடையாது)
(iv) பதவிக்கு சாட்டப்படும் பணிகளை உரியமுறையில் பூர்த்தி செய்வதற்கும் நாடு முழுவதிலுமுள்ள எந்தப் பிரதேசத்திலும் வேலை செய்வதற்கும் அவசியமான உள மற்றும் உடல் நலத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**02. சேவையில் இணைத்துக்கொள்வதற்கானநிபந்தனைகள்**

இந்த பதவி நிரந்தரமானது. நியமனம் வழங்கப்பட்ட திகதியில் இருந்து மூன்று வருட காலம் தகுதிகாண் காலமாகும். ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றுக்கு உரித்துடையவர். அரசினால் அமுல் படுத்தப்பட்ட மற்றும் காலத்திற்கு காலம் விதிக்கப்படும் பொதுச் சட்டங்கள், நிபந்தனைகள் மற்றும் நியதிகளுக்கும் உட்படும். சேவையின் தேவைக்கு அமைவாக உரிய முறையின் கீழ் தகைமையுடையவர் தேர்ந்தெடுக்கப்படுவர்.

**03.** பதவிக்குஉரியதகவல்கள்

| | |
|---|---|
| 3.1பதவியின் பெயர்<br>3.1.1சம்பள அளவு<br>3.1.2தகைமை | **சிரேஸ்ட கொள்கை ஆராய்ச்சி அலுவலர்**<br>AR2-2016 (76,200-2,000x10-96,200/-)அரச முகாமைத்துவ சேவை 02/2016(1) ற்கு அமைவாக செயற்படுத்தப்படும்.<br>**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**<br>(அ)(i)பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் புள்ளிவிபரவியல், முகாமைத்துவம், சமூக விஞ்ஞானம் போன்ற துறைகளில் முதல் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு (மேல்) சித்தியுடன் பட்டமொன்றினைக் கொண்டிருததல். (கல்வியியல் பட்டமொன்றைக் கொண்டிருத்தல் விசேட தகுதியாகும்)<br>அல்லது<br>(ii)பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் புள்ளிவிபரவியல், முகாமைத்துவம், சமூக விஞ்ஞானம் போன்ற துறைகளில் இரண்டாம் வகுப்பில் (கீழ்) சித்தியுடன் நான்கு வருட விசேட பட்டமொன்றினைக் கொண்டிருப்பதுடன் ஒரு வருட ஆராய்ச்சி பட்டப்பின்படிப்பு பட்டத்தினையும் கொண்டிருத்தல். (கல்வித் துறையில் ஆராய்ச்சி பட்டப்பின் படிப்பினைக் கொண்டிருத்தல் விசேட தகுதியாகும்)<br>அல்லது<br>(iii)பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் புள்ளிவிபரவியல், முகாமைத்துவம், சமூக விஞ்ஞானம் போன்ற துறைகளில் பொது பட்டமொன்றினையும் இரண்டு வருட ஆராய்ச்சி பட்டப்பின்படிப்பு பட்டத்தினையும் கொண்டிருத்தல்.<br>அத்துடன்<br>ஆரம்ப பட்டத்தினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் 08 வருட கல்வி ஆராய்ச்சி அனுபவத்தைக் கொண்டிருத்தல். |

| | |
|---|---|
| | (iv)மேற்குறிப்பிட்ட பட்டத்திற்கு சமர்ப்பிக்கப்படும் ஆராய்ச்சி தவிர்ந்த வேறு ஆராய்ச்சிகள் / ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் அவை விசேட கவனத்தில் கொள்ளப்படும்.<br><br>**உள்ளக விண்ணப்பதாரிகள்**<br>(அ) (i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பட்டப்பின்படிப்பு பட்டத்தினை அல்லது பட்டப்பின்படிப்பு கல்வி டிப்ளோமாவைக் கொண்டிருத்தல்.<br>அல்லது<br>(ii) உரிய துறையில் தத்துவவியல், விஞ்ஞானவியல் பட்டப்பின்படிப்பு பட்டத்துடன் கல்வி/ ஆராய்ச்சி சேவை வகுப்பில் 10 வருட கால சேவை முன்னனுபவத்தைக் கொண்டிருத்தல்.<br>அல்லது<br>(iii)பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட பட்டத்தில் முதல் அல்லது இரண்டாம் வகுப்பு சித்தியுடன் தேசிய கல்வி ஆணைக்குவின் கொள்கை ஆராய்ச்சி அலுவலர் பதவியில் 15 வருடத்திற்கு மேற்பட்ட முன்னனுபவத்தைக் கொண்டிருத்தல்.<br><br>(ஆ)சேவைக் காலத்தினுள் சமர்ப்பிக்கப்பட்ட ஆராய்ச்சி பத்திரங்கள், எண்ணக்கரு பத்திரங்கள், வெளியீடுகள் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும். |

விண்ணப்பத்தை கீழ் குறிப்பிட்ட மாதிரி விண்ணப்பத்திற்கு அமைவாக தயார் செய்து 2017.04.14 ம் திகதியில் அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் தலைவர், தேசியகல்வி ஆணைக்குழு, இலக்கம் 126, நாவலவீதி, நுகேகொட எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை அனுப்பும் கடிதவுறையின் இடப்பக்க மூலையில் பதவியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். பூரணமற்ற விண்ணப்பங்கள் அல்லது விண்ணப்ப திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

தற்போது அரச / அரச நியதிச்சட்ட (Semi government) சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் எனின் விண்ணப்பத்தை நிறுவன தலைவரின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

இந்த அறிவித்தலுக்கு அமைவாக வெற்றிடத்தை பூர்த்தி செய்தல், பூர்த்தி செய்யாது விடுதல் அல்லது ஓர் பகுதியை மட்டும் பூர்த்தி செய்வதற்கான முழுமையான அதிகாரம் தேசியகல்வி ஆணைக்குழுவிடம் உள்ளது.

எதிர்பார்க்கப்படும் அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் மட்டும் ஆட்சேர்ப்பு முறைமைக்கு ஏற்ப கவனத்தில் கொள்ளப்படுவர்.

*கவனத்தில் கொள்ள வேண்டியது. –நிறுவனம் தற்போது இலக்கம் 126, நாவலவீதி, நுகேகொட எனும் முகவரியில் உள்ளதுடன், இதற்குகிளைக் காரியாலயங்கள் கிடையாது.

குறிப்பு.- இந்த அறிவித்தலானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகியமொழிகளில் வெளியிடப் பட்டிருக்கின்றன. இவ்வர்த்தமானி அறிவிததல் பற்றிய சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்பட்டால் சிங்கள மொழி உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பேராசிரியர் லக்ஷ்மன் ஜயதிலக
தலைவர்
தேசியகல்விஆணைக்குழு
இலக்கம் 126,
நாவலவீதி,
நுகேகொடை